1978 ஆகஸ்ட் 31]

இணைப்பு XVI.

[116-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 191-க்கான விடையைக் காண்க.]

விடை :—(அ) மற்றும் (ஆ) :—நீலகிரி மாவட்டம் வெலிங்டனில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் கண்டு பிடித்த ஹெச்டி 2135 என்னும் ரகம் நீலகிரி மற்றும் கொடைக்கானல் மலைப் பகுதிகளில் பயிரிடுவதற்கேற்றது. இவ்வகை கோதுமையை அதிக அளவில் பயிரிடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. சமவெளிகளில் பயிரிடுவதற்கேற்ற ஹெச். டபிள்யூ 657 என்னும் கோதுமை ரகம் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. சோதனைக்குப்பின் தமிழகமெங்கும் இவ்வகை ரகங்கள் பயிரிடுவதற்கு வெளியிடப்படும்.

2. இவை தவிர, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் உழவியல் துறையில் கடந்த இரண்டாண்டுகளாக கோதுமைப் பயிரில் நடத்திய சோதனைகளில், கோதுமை ரகங்களான எச்.டி. 2189, "கல்யாண்சோனா" தமிழ்நாட்டுக்கு உகந்ததாகவும், நல்ல மகசூலை இறவைப் பயிரில் கொடுக்கக் கூடியதாகவும் தெரிய வருகிறது. இந்த ரகங்கள் ஒரு ஹெக்டேருக்கு 25 முதல் 30 குவிண்டால் வரை மகசூல் கொடுத்திருக்கிறது.

3. தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தில் பெருமளவிலும், மதுரை, சேலம், கோவை மாவட்டங்களிலும் 1,650 டன் தானியம் விளைவிக்கப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS